# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 18 வியாழக்கிழமை (01-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 154


# இன்னும் சில தினங்களில் அமைச்சரவையில் மாற்றம்!

## எதிர்ப்பு வந்தால் திடீர்த் தேர்தல் ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

கொழுப்பு, மே 1

"இன்னும் சில தினங்களில் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படும். அமைச்சரவை மாற்றத்துக்கு அமைச்சர்கள் ஆட்சேபம் தெரிவித்தால் திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தத் தயங்க மாட்டேன்''

இவ்வாறு பகிரங்கமாக அறிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சில அமைச்சுகளின் பணிகளில் முன்னேற்றம் எதனையும் காண முடியவில்லை என்றும் அத்தகைய அமைச்சுகளுக்குப் பொறுப்பானவர்கள் மாற்றப்படுவர் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும் அவர் அமைச்சுகளின் பெயர்களை நேரடியாகக் கூறாமல், அவற்றோடு சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மட்டுமே குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே, ஜனாதிபதி அமைச்சரவை மாற்றம் குறித்தும் திடீர்த் தேர்தல் குறித்தும் பிரஸ்தாபித்தார்.

ஜனாதிபதியின் இந்தப் பகிரங்க அறிவிப்பைத் தொடர்ந்து அமைச்சரவை மாற்றம் இரண்டொரு தினங்களில் இடம்பெறக் கூடும் என்ற ஊகம் கொழும்புச் செய்தி வட்டாரங்களில் நிலவுகிறது.

அமைச்சரவை மாற்றத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பௌசி, ஸ்ரீமானி உட்பட பலரின் பொறுப்புகளில் மாற்றம் வரலாம்

கொழும்பு, மே 1

அமைச்சரவை மாற்றத்தின்போது பௌசியின் சுகாதார அமைச்சு ஸ்ரீமானி அத்துலத் முதலிக்கும் —

ஸ்ரீமானியின் போக்குவரத்து அமைச்சு பௌசிக்கும் வழங்கப்படலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இளைஞர் விவகார அமைச்சராக இருக்கும் எஸ். பி. திஸநாயக்காவுக்கு நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு வழங்கப்படலாம் என்றும் பேசப்படுகிறது.

தொழில், சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம், நீர்ப்பாசனம், இளைஞர் விவகாரம் ஆகிய அமைச்சுக்களில் மாற்றம் வரலாம் என்றும் கூறப்படுகிறது.

அதேசமயம் பிரதி அமைச்சர்களான நந்தமித்திர ஏக்கநாயக்காவுக்கும் பிரேம்லால் திஸநாயக்காவுக்கும் அமைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மேதின விழாக்கள்

கொழும்பு, மே 1

மேதினத்தையொட்டியாழ். மாவட்டத்தில் ஈ.பி.டி.பி., புளொட் ஆகியவை விழாக்களை நடத்துகின்றன.

மேதினத்தையொட்டி ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு முன்னால் கடந்த செவ்வாய் முதல் ஈ.பி.டி.பி. அமைப்பு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. இதன் தொடர் நிகழ்வாக இன்று பி.ப. 2.00 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

ஊர்காவற்றுறை பிரசைகள் குழுத் தலைவர் கி. லீனஸ் தலைமையில் இன்றைய நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன், யாழ். மாவட்ட ஈ. பி. டி.பி. அரசியல் அமைப்பாளர் கே. வி. கே. இலேடு ஆகியோர் பிரதம விருந்தினர்களாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கோணேசர் ஆலய முன்னாள் பூசகர் நேற்று திருமலை நீதிமன்றில் ஆஜர்

திருகோணமலை, மே. 1

திருகோணமலை கோணேசர் ஆலய முன்னாள் பூசகரின் மனைவி அம்பிகாவின் கொலை தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் சரண் அடைந்த பிரதான சந்தேக நபரான முன்னாள் பூசகர் விசாகேஸ்வரசர்மா நேற்று திருகோணமலை நீதிவான் ஏ. சுவர்ணராஜ் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பாக ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாலமுரளிசர்மாவும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை நீதிவானிடம் இரகசியமாக அளிக்க விரும்புவதாக பாலமுரளிசர்மா தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிசேன கூரே நாடு திரும்பினார்

கொழும்பு, மே. 1

ஐ. தே. கட்சி அரசின் மூத்த அமைச்சரும், அக்கட்சியின் முன்னாள் பொருளாளரும், முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு மிக நெருங்கியவருமான சிறிசேன கூரே நேற்று நாடு திரும்பினார்.

(இ-10)

## கொழும்பில் இன்று 13 கூட்டங்கள்

கொழும்பு, மே 1

கொழும்பில் இன்று 13 மேதினக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெறவிருக்கின்றன.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் நகர மண்டப வளவில் ''சமாதானம் மூலம் அபிவிருத்தி'' என்ற தொனிப் பொருளில் நடைபெறும். ஜனாதிபதியும், பிரதமரும் இதில் கலந்து கொள்வார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் ஹற்றனிலும் ஜே. வி. பி. யின் மேதினக் கூட்டம் கொழும்பு ஹவ்லக் பூங்காவிலும் நடைபெற உள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கூட்டம் தலவாக்கலையில் நடைபெறும். (இ-4)

## திருமலை, மட்டிக்கழிப் பகுதியில் சிங்கள குடியேற்றத்துக்கு திட்டம்

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 1

திருகோணமலை நகரில் 'மட்டிக்கழிப் பகுதியில் சிங்களவரைக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் இரகசியமாக மேற்கொள்ளப்படுவதாக விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

காணி அபிவிருத்தி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் திருகோணமலைக்கு விஜயம் செய்து இது தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் —

சிங்களக் குடியேற்றத்துக்கென காணிகள் ஒதுக்கப்பட்டு சிங்கள மீனவர்கள் மூலம் இதனை சிங்களக்கிராமம் ஆக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசு இரகசியமாக மேற்கொண்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் செய்தி அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (இ-4)

## கைதிகள் பரிமாற்றத்துக்கு பிரபாகரன் இணங்க வேண்டும்

### தென் பகுதி அமைப்பு கோரிக்கை

கொழும்பு, மே 1

''கைதிகள் பரிமாற்றத்துக்கு விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் சம்மதிக்க வேண்டும்''

மேற்கண்டவாறு காணாமற் போன படையினர் நலன் காக்கும் அமைப்பின் உப தலைவர் நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த அமைப்பின் கூட்டம் கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

வகுப்புவாதத்தின் காரணமாக யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வடக்கில் புலிகள் ஆட்சியமைக்க விரும்பினால் வாக்குச் சீட்டுக்களைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் பலாலியில் காணாமற்போன வை- 12 விமானத்தின் விமானியின் தந்தையே நாணயக்கார என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-150)

## மாநில காங்கிரஸ் அமைச்சர்கள் இன்று பதவிப் பிரமாணம்

புதுடில்லி, மே 1

தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ந்த நான்கு அமைச்சர்களும் இந்திய ஜனாதிபதி மாளிகையில் இன்று பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இந்த அமைச்சர்கள் நால்வரும் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொள்ள இருந்தனர்.

எனினும் அவர்கள் கால அவகாசம் கேட்டதைத் தொடர்ந்து இந்த வைபவத்தை இன்று நடத்த முடிவாகி உள்ளது.

முன்னர் இவர்கள் வகித்த அதே அமைச்சுப் பொறுப்புக்களே இவர்களுக்கு மீண்டும் வழங்கப்படும் என்று எதிர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன்

## மே தின அறை கூவல்

★ அரசே சிமெந்துத் தொழிற்சாலையை மீளத் திற
★ தொழிலாளர் சக்தி தேசத்தை மாற்றும்
★ போரை நிறுத்தி சமாதானப் பாதையைத் திற

சி. பொ. தொ. யூனியன்
காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை
(சி-641)



எமது ஒறிஜினல் வெளியீடு!
ரஜனிகாந் நடித்த
அருணாச்சலம்
விஜயகாந் நடித்த
பெரியமருது

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(46612)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு: 05 — 02 — 1938



இறப்பு: 02 — 04 — 1997

### திருமதி பவளம் சிவசுப்பிரமணியம்

(Properitor Anitha School)

நொடிப்பொழுதில் உமது பிரிவு- எம் நெஞ்சத்தை வாட்டுகின்றதே! ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

2-4-97 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது அன்புத்தாயாரின் வீட்டுக்கிருத்தியம் அவர்களின் இல்லத்தில் 2-5-97 வெள்ளிக்கிழமை நடைபெறும்.


அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவிகள் அனைவரும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், உடன்பிறப்புக்கள், மைத்துனர்கள்.

பூனாறி மரத்தடி,
கொக்குவில்.
(46617)

## நினைவு அஞ்சலி

### 31 ஆம் நாள் 10 ஆம் ஆண்டு



வேதமாணிக்கம் சாமுவேல் — சாமுவேல் குஞ்சி

மலர்வு: 10 - 05 - 1922 — மலர்வு: 05 - 02 - 1929
உதிர்வு: 01 - 04 - 1997 — உதிர்வு: 02 - 04 - 1987

என்றும் நீங்கா நினைவுடன் எம்மை விட்டுப் பிரிந்த அன்புத் தெய்வங்களே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டும்,

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பாலசிங்கம் விடுதி அருகில்,
புகையிரத நிலையம்,
கொக்குவில்.
(46614)

## சமய சந்நிதிகளில்

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் கோயில் வருடாந்த இலட்சார்ச்சனைத் திருவிழா இன்று காலை முதல் நடைபெறவுள்ளது. மாலை 5 மணிக்குப் பின்னர் விநாயகப் பெருமானின் வீதி உலா இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

அளவெட்டி புனித சூசையப்பர் திருநாள் விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நாளை வெள்ளி பிற்பகல் 4 மணிக்கு ஆதீன முதல்வர் தலைமையில் திருநாவுக்கரச நாயனார் குருபூசை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. (ஐ-30)

★ ★ ★

நெடுந்தீவு புனித பத்திமா அன்னை ஆலயத் திருநாள் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநாள் திருப்பலிப் பூசையுடனும் திருச்சுருபச் சுற்றுப்பிரகாரத்துடனும் நிறைவு பெறும்.

11 ஆம் திகதி ஞாயிறன்று சிறுவர்களுக்கு முதல் நன்மை வழங்கப்படும். பங்குத் தந்தை அருட்திரு எம். மொன்வெட்அடிகளார் திருப்பலிப் பூசைகளை ஒப்புக் கொடுப்பார். (ஐ-111)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இசைச் சொற்பொழிவு இடம் பெறும். 'பேயுருக் கேட்ட பெருமாட்டி' என்ற தலைப்பில் ஆசிரியர் க. ஆனந்தராசா இசைச் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

★ ★ ★

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை வெள்ளிக் கிழமை விளக்கு வைப்புடன் ஆரம்பமாகி எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை வெளிமடையுடன் நிறைவு பெறும். (ஐ-4)


எமது
புதிய வெளியீடுகள்

வருண்ராஜ், அப்சரா
அதிபதி
சத்தியராஜ், மீனா
வள்ளல்
(ஒறிஜினல்)
ரஜனி, ரம்பா
அருணாச்சலம்
(ஒறிஜினல்)
அஜித், ரம்பா
ராசி

குறிப்பு:
இன்னும் பல படங்கள் 'டிஸ்க்' வெளிவந்துள்ளன.

சுப்ப ஸோ
([illegible])
யாழ்ப்பாணம்.
(சி/652)


உ

புதுவையூர் அருள்மிகு ஸ்ரீ மஞ்சள் உனா
ஸ்ரீ நகுல ஞான வைரவப் பெருமான்
திருக்கோயில்

## மண்டல பூர்த்திப் பெருவிழா விஞ்ஞாபனம்

நிகழும் ஈசுர ஆண்டு சித்திரை மாதம் 19 ஆம் திகதி (02-05-1997) வெள்ளிக்கிழமை பகல் 12. 00 மணிக்கு எம்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும்.

பகல் 1. 00 மணிக்கு அன்னதான வைபவமும் மாலை 6. 00 மணிக்கு எம்பெருமான் வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் பெருமானைத்
தரிசித்து அருள் பெறுக!

பிரதமகுரு.
தி. கெங்காதரக் குருக்கள்-புன்னாலைக்கட்டுவன்.
(46611) ஞானவைரவப் பெருமான் அடியார்கள்

## கண்ணீர் அஞ்சலி

செல்வி சுப்பையா நளினியின் தாயார்

### திருமதி சுப்பையா பொன்னம்மா

அவர்கள் சிவபதமெய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்,
யாழ். போதனா வைத்தியசாலை.
(46615)


## பெயர் மாற்ற அறிவித்தல்

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த சின்னத்தம்பி சித்திரவடிவேல் ஆகிய நான் எனது பிள்ளைகளான சி. ஷாந்தசொரூபன் என்பவரின் பெயர் சி. பிரசாந் என்றும், சி. சுகன்யா என்பவரின் பெயர் சி. டர்சிக்கா என்றும் இன்று தொடக்கம் சகல ஆவணங்களிலும் வழங்கப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சி. சித்திரவடிவேல்
(தந்தை)

தும்பளை,
பருத்தித்துறை.
25-04-1997
(சி/648)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### கிருஷ்ணர் தாமோதரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபரும், சங்கானை ப. நோ. கூ. சங்க பணிப்பாளர் சபை உறுப்பினரும்)

உதயம்: 02 — 12 — 1926
அஸ்தமனம்: 02 — 04 — 1997

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 02-05-97 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அந்நிகழ்வில் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து சகலவிதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

டச்சு வீதி,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
(சி/651)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்று நோக்கில் புரியும்

ஓடியோடி உழைத்தும் அவன்
ஒன்றும் கண்ட தில்லை
கூடவரும் வறுமை யன்றிக்
குதூகலங்கள் இல்லை
கோபுரங்கள் செய்தும் என்ன
குச்சில் அவன் வாழ்வு
கொட்டும்பனி வெயில் கிடந்து
குளறுதவன் வயிறு!

வேலைக்கேற்ற கூலி இன்றி
வேதனையை உண்பான்
காலை மாலை ஓய்வறியாக்
கடும் உழைப்பில் சோர்வான்
ஆலையிலே சங்கொலிக்கும்
அவன் விரைந்து செல்வான்
ஆயின் என்ன அவன் குடிலில்
அரை வயிற்றுக் கஞ்சி

பட்டினிக்குள் வாடும் ஒரு
பரதேசி வர்க்கம்
பாடுபடும் அவன் உழைப்பில்
நாடு காணும் சொர்க்கம்
ஒட்டியுலர் வயிற்றுடனே
ஓர் உருவம் தெரியும்
ஓ... அவனோர் தொழிலாளி
உற்று நோக்கில் புரியும்

— நெடுந்தீவு லக்ஸ்மன்

# யுத்தங்களைக் கொன்றிடு!

காதினிக்கும் ஒளியுடன் கால்பதிக்கும் மேதினமே—எங்கள்
வேதனைகள் அகன்றிட நிமிர்ந்திடு மேதினமே,
செங்குருதி ஆழியிலே மூழ்கிவந்த மேதினமே — எங்கள்
செம்பருத்தி விழிகளிலே, அமைதி காட்டு மேதினமே!

உச்சிப் பகற்பொழுதில் உழுதுழுது விதைத்தவர்களும்
குச்சுக் குடிசைகளில் குமுறலுடன் வாழ்பவர்களும்,
நிச்சயமாய் களித்திருக்க நிமிர்ந்துவா மேதினமே
அச்சத்தை அகற்றி, மகிழ்ச்சியைக்கொட்டிவா மேதினமே!

பூக்கள் தூவுகின்றோம் புன்னகையை தந்திடு மேதினமே!
பாக்கள் படிக்கின்றோம் யுத்தங்களைக் கொன்றிடு மேதினமே!
நாட்களைக் காவுகின்றோம் நல்லவைகள் தந்திடு மேதினமே!
மக்கள் இணைகின்றோம் வல்ல்மை குவித்திடு மேதினமே!

— வித்தியாசன்

# இன சமத்துவம் இல்லையானால் சமாதானமும் சாத்தியமாகாது

**- டக்ளஸ் தேவானந்தா**

உழைக்கும் மக்களும் உரிமைக்காகப் போரடும் மக்களும், எழுச்சியுடன் அனுஷ்டிக்கும் நாள் மேதின நாளாகும் இந்நாளில் துயர்ளைச்சுமந்து வேதனை அம்புகள்நெஞ்சில் துளைத்திட வாழும் நம்மக்கள் நம்பிக்கைகளை இழந்து விடாமல் உறுதி பெற்றிடவும், ஒன்றுபட்டு நின்றிடவும், திடசங்கற்பம் கொள்ள வேண்டும்

நீதியான அரசியல் தீர்வு, நேர்மையான சமாதானம் என்பன எமது விருப்பமாக இருந்திட வேண்டும்.

சமாதானத்துக்கான, விலையாக நம் உரிமைகளை விட்டுக் கொடுத்திட இயலாது. அரைகுறைத் தீர்வுகளை அங்கீகரிக்கவும் முடியாது.

ஆண்டாண்டு காலமாக இன்னுயிர்களை இழந்து, உடைமைகள், துயர்பல சுமந்து வளர்த்தெடுக்கப்பட்டஉரிமைப் போராட்டத்தை அற்ப சலுகைகளுக்காகத் தாரைவார்க் முடியாது.

**இன்று மேதினம் ஆகும். இதனை ஒட்டி அரசியல் கட்சிகளின் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கைகள் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.**

இன சமத்துவம், இனங்களுக்கிடையிலான ஜனநாயக உறவுகள் என்பவற்றின் அடித்தளம் இல்லையானால் ஐக்கிய இலங்கையை கட்டி எழுப்ப முடியாது. இன சமத்துவம் இல்லையானால் சமாதானமும் சாத்தியமாகாது.

உறவுக்கு கை கொடுப்போம்! உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற அடிப்படையிலேதான் அரசுடன் எமது உறவு அமைந்திருக்கிறது. நாம் என்றும் மக்களின் பக்கமே நிற்போம். வடக்கு-கிழக்கு, இணைந்த சமஷ்டித் தீர்வுக்கு குறைந்த எந்தத் தீர்வும் திருப்தியான தீர்வாக அமையாது என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும். நீதியான தீர்வுக்காகவும், நேர்மையான சமாதானத்துக்காகவும் ஒன்றுபட்டுப் போராட இந்த மேதின நாளில் உறுதி ஏற்போம். ★

# அரசியல் தீர்வுக்கான போருக்கு தொழிலாளர் அரவணைப்பு தேவை

**- தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

இன்று மேதினம். உலகெங்கும்தொழிலாளர் வர்க்கம் நூறாண்டுகளுக்கு முன்பு உதிரம் சிந்திப் பெற்ற உயரிய உரிமையை கொண்டாடும் எழுச்சித்தினமாகும்.

இலங்கையிலும் தொழிலாளர் தினம் பல்வேறுபட்ட அரசியல் தலைமைகளினாலும் தொழிற் சங்கங்களாலும் தத்தமது நாள்களை பிரதிபலிக்கும் விழாக்களாக கொண்டாடப்படுகின்றன. அந்நியரிடமிருந்து ஆட்சி கைமாறி ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாகிவிட்ட போதிலும், சிறுபான்மைத் தமிழர்களது தாயகப் பிரதேசமான வடகிழக்குப் பிரதேசத்தின் தொழிலாளர் வர்க்கம் தமது உரிமைகளை வலியுறுத்தி ஏனைய பிரதேசத்துக்கு தொழிலாளர்களுடன் இணைந்து தொழிலாளர் தினத்தை ஓரணியாகத் திரண்டு கொண்டாடும் நிலை ஏற்படாதிருப்பது துரதிர்ஷ்ட வசமாகும்.

இந்நிலை, தமிழர் தாயகத்தில் வாழும் தொழிலாளர்களினது மட்டு மன்றி தென்னிலங்கையில் வாழும் தொழிலாளர்களினதும் உரிமைகளை மறுதலிக்கவும், நலன்களை அடக்கி ஆளவும் ஆளும் அதிகார வர்க்கத்துக்கு வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதோடு இனவாத நெய் ஊற்றி உள்நாட்டு யுத்தம் எனும் கொடுந்தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்து அதில் குளிர் காய்ந்து தமது நாள்களை நிரந்தரமாக பேணிப் பாதுகாத்து உறுதிப்படுத்திக் கொள்ளும் துணிவையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தரகு முதலாளித்துவ பிரதிநிதிகளிடமும், தேசிய முதலாளித்துவ பிரதிநிதிகளிடமும், பூர்சுவா சிந்தனைகள் நிரம்பிய அரசு இயந்திர அதிகாரிகளிடமும், இனவாத அரசியல் சித்தாந்தங்களை வரிந்து கட்டிக் கொண்ட அரசியல் வாதிகளிடமும் சிக்கி தென்னிலங்கையில் இலட்சக்கணக்கான தொழிலாளர் வர்க்கத்தினர் அல்லற்பட்டு தமது அடிப்படை உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கும் இந்நாளில், வடகிழக்குப் பிரதேசத்தில் போரின் கொடுமைகளுக்குள்ளும், போர்ச் சட்ட திட்டங்களுக்குள்ளும், கொடூரமான இரக்கமற்ற போர் அணிகளுக்குள்ளும் சிக்கித் திணறும் எமது தொழிலாளர்களின் உரிமைகள், நலன்கள் பற்றி இத்தீவின் ஆளும் வர்க்கம் கிஞ்சித்தேனும் அக்கறை கொள்ளும் என்று எதிர்பார்ப்பது மடைமை.

**நட்டாற்றில்**

தெற்கின் பேரினவாத அரசியலுக்கு முகங் கொடுக்கும் நோக்குடன், ஒன்றிணைந்த அரசியல் சக்தியை வடக்கிழகில் வாழும் சிறுபான்மைத் தமிழ்பேசும் மக்களிடையேயிருந்துகட்டி எழுப்பும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட எமதுதேசிய விடுதலைப் போராட்ட வடிவங்கள் ஆரம்பத்தில் நடுத்தர வர்க்கத்தினரது அடிப்படைப் பிரச்சினைகளை நலன்களை மையமாக வைத்து தமிழ் தேசிய முதலாளித்துவ தலைமைகளின் ஆதரவுடன்

(5ஆம் பக்கம் பார்க்க)

# பண்புப்பண்ணைக்கு வயது நூறு

**1897** ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி, தர்மப் பயிருக்கு வித்தூன்றிய நாள் அது. அன்று பிற்பகல் சுவாமி விவேகானந்தன் விருப்பத்தின்படி ஸ்ரீராமகிருஷ்ணரின் துறவிச் சீடர்களும், இல்லறச் சீடர்களும் பாக்பஜாரிலுள்ள பலராம் பாபுவின் வீட்டில் கூடினர்.

சுவாமிஜி மிகவும் முக்கியமான ஏதோ விஷயத்தைச் சொல்லப்போகிறார் என்ற ஆர்வம் எல்லோரிடமும் ஏற்பட்டது. சுவாமிஜியும் தமது பணிகளுக்கு மையக்கருவான ஒரு செயலைச் செய்யப் போகும் துடிப்புடன் விளங்கினார். கூடியமட்டும் துடிப்பை அடக்கிக்கொண்டு ஆரம்பித்தார்:

''பல நாடுகளில் நான் சுற்றிப் பார்த்ததிலிருந்து. ஸ்தாபனம் என்று ஒன்று இல்லாமல் மகத்தான எதையும், நிரந்தரமான எதையும் சாதிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். என்றாலும் இந்தியாவைப் போல் தற்போது வளர்ச்சி பெற்றிராத ஒரு நாட்டில், எல்லா அங்கத்தினர்களும் சம உரிமை பெற்று, பெரும்பான்மை அங்கத்தினர்களின் முடிவுப்படி தீர்மானங்கள் செய்கிற ஜனநாயக அடிப்படையிலான ஸ்தாபனத்தைத் தொடங்குவது விவேகமாகாது என்றே எனக்குத் தோன்றுகிறது.

மேலை நாடுகளில் உள்ள நிலைமை வேறானது... ... நம்மிடையேயும் கல்வி நன்றாகப் பரவி நாம் தியாகம் செய்ய அறியும் போது சமூகம், தேசம் இவற்றுக்காக நமதுபிரத்தியேக நலன்களையும் விசாரங்களையும் காக்க நாம் அறியும் போது ஜனநாயக அடிப்படையில் செயல் புரிவது சாத்தியமாகக் கூடும். இதைக் கவனத்தில் கொண்டு பார்க்கும் போது, நிகழ்காலத்துக்கு நமது ஸ்தாபனம் ஒரு சர்வாதிகாரியின் கீழ்தான் நடக்க வேண்டும்; அவருடைய உதரவுகத்ளுக்கு ஒவ்வொருவரும் அடங்கி நடக்க வேண்டும்; பிறகு உரிய காலம் வாய்க்கும் போது, ஸ்தாபனம் அங்கத்தினர்களின் கருத்துக்கும் இணக்கத்துக்கும் இசைய நடக்கும்.''

''யாருடைய பேரில் நாங்கள் சன்னியாசிகளாகியிருக்கிறோமோ, எவரை இலட்சியமாகக் கொண்டு நீங்கள் இந்த சம்சார காரியத்தில் வாழ்க்கையை நடத்துகிறீர்களோ, யாருடைய புனித நாமமும் யாருடைய இணையற்ற வாழ்வு உபதேசங்கள் இவற்றின் சக்தி. அவர் மறைந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் உலகின் கிழக்கு மேற்கு இரு பாகங்களிலும் சற்றும் எதிர்பார்க்க முடியாத அளவில் பரவியுள்ளதோ அப்படிப்பட்டவருடைய பெயரை இந்த ஸ்தாபனம் தாங்கும். இந்தச் சங்கத்துக்கு ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் என்று பெயர் ஏற்படுமாக! நாம் யாவரும் குரு மகராஜின் பணியாட்கள் தான். நீங்கள் யாவரும் இந்தக் காரியத்தில் உதவுவீர்களாக!''

கூடியிருந்த யாவருக்கும் உற்சாகம் பொங்கிற்று. உள்ளுக்குள்ளே குருபக்தி பொருமிக் கொண்டிருந்த அவர்கள் அதனை வடித்துக்காட்ட ஒரு நல்ல வாய்ப்பு பிறந்து விட்டதே என்பதில் உவகை கொண்டனர்.

ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் பணிகள் இன்னவாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் விவாதித்தனர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்கத்தின் கொள்கைகளும் நோக்கங்களும் வரையறை செய்யப்பட்டன. ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஒரு ஸ்தாபனமாக உதயமாகியது. இன்று அந்தப் பண்புப் பண்ணைக்கு வயது நூறு. ★

# தமிழ் இயக்கங்கள் மத்தியில் புரிந்துணர்வு மிக அவசியம்

**- ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

சிக்காக்கோதொழிலாளர்களின் 8 மணிநேர வேலைக்கான இரத்தம் தோய்ந்த போராட்டத்துடன் மாத்திரம் நூறு வருடங்களுக்குப் பின்னர் நினைவு கூரும் மேதினத்தை மட்டுப்படுத்தி விட முடியாது. இன்று எமது தமிழ்மக்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்கள், நானாந்த வாழ்க்கையே போராட்டமாக மாறிவிட்ட நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

49 வருடங்களாக தமது உரிமைகளுக்கு தமிழ்மக்கள் போராடி வருகிறார்கள். ஆனால் இன்னும் விடிவானம் தெரியவில்லை. அடிவானத்தில் இன்னும் காரிருள் காணப்படுகிறது. இரண்டு சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் தம்வாழ்வில் வசந்தம் வரும் என நம்பினார்கள். அவை இரண்டும் கானல் நீரானதுதான் கொடுமையானது.

தற்போது எஞ்சி நிற்பவை [illegible] அவலம் நிறைந்த அகதி வாழ்க்கையும், மரணமும் மாத்திரம்தான். சமாதானத்தில், கௌரவமான தீர்வில் அக்கறை கொண்ட மக்களுக்கு இத்தகைய நிகழ்வுகள் பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விட்டன. இதனால் மக்கள் விரக்தியின் எல்லைக்கே சென்றுவிட்டனர்.

தற்போது மக்களின் ஒரு பகுதியினர் வாழ்க்கை நரகமாகிவிட்ட தமது தேசத்தை விட்டு ஓடிவிட விரும்புகிறார்கள். மற்றொரு பகுதியினர் எவ்வாறாவது இந்த தேசத்திலேயே வாழ்ந்து முடிப்போம் என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கிறார்கள். இந்த தேசத்தின் வாழ்க்கை என்பது மரணம், பட்டினி, நோய், அகதி என்றவாறே அமைகின்றது.

விடுதலையின் பெயரால் மக்கள் செய்த தியாகங்கள் அளப்பரியவை, அவர்கள் தமது உயிர், உடைமைகளை மாத்திரம் இழக்கவில்லை. தமது பாரம் பரியம் மிக்க கல்வி கலாசார வாழ்க்கையை இழந்திருக்கிறார்கள். அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் என இரண்டு விதமான பிரதேசங்களிலும் நாளாந்தம் கெடுபிடிகள் நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள். மரணம, சுற்றிவளைப்பு, காணாமற் போதல் என்பன அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களில் பரவலாக நிகழ்கின்றன.

தொலைதூர கிராமங்களில் நடைபெறும் மோதல்கள் விமானக் குண்டு வீச்சுக்களினால் மரணங்களும், அகதி வாழ்வும் அதிகரித்துக் கொண்டு இருக்கின்றன. அகதிகள் ஆனவர்கள் முகாம்களில் தடுப்புக் காவல் கைதிகள் போல் லாழ்கின்றார்கள்.

**மக்கள் அவலம் தொடர்கிறது**

காணமல் போன தமது பிள்ளைகளைத் தேடி கொழும்பு மகசீன் சிறைச்சாலை, களுத்துறை, வீரவில, பண்டாரவளை, புனர்

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் ப. நோ கூ. சங்கம்
# மே நாள் செய்தி

அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாள வர்க்கம் தமது உரிமைகளுக்காகப் போராடி உரிமைகளைப் பெற்ற நாள் மே நாள்.

**பணிப்பாளர், பணியாளர்.**
**நல்லூர் ப. நோ. கூ. சங்கம்**
(சி/647)

---

## குருபூசை

யாழ்ப்பாணம் மே.

திருநாவுக்கரசு நாயனார் குரு பூசை தினம் நாளை வெள்ளிக்கிழமை ஆகும் குடாநாட்டில் உள்ள பல பாடசாலைகளில் சித்திரைச் சதயமான நாளை அப்பரடிகள் குரு பூசை சமய நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட உள்ளது. (அ)

---

## சித்தன்கேணியில் கல்விக்கண்காட்சி


யாழ்ப்பாணம், மே 1

சித்தன்கேணி வட்டு. இந்துக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமையும் நாளைமறுதினம் சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4மணி வரை மேற்படி கல்லூரியில் நடைபெறும்.

கல்லூரி மாணவர்களின் ஆக்கங்கள் கலை, கலாசாரம், விஞ்ஞானம், விளையாட்டு, சமூகவியல், வர்த்தகம், மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கும் கணனி இயல், பொறிமுறை இயந்திரவியல் சார்ந்த சாதனங்கள் கண்காட்சியில் இடம் பெறும். (ஐ-4)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27 - 12 - 1961 | 28 - 04 - 1996 |

அமரர்
### வேலுப்பிள்ளை கணையசிங்கம்
(சாந்தன்)

திதி: 01 - 05 - 1997

எங்கள் குடும்பத்தின் திருவிளக்காகவும் அன்பின் திருவுருவமாகவும், பண்பின் சிகரமாகவும், பாசத்தின் உறைவிடமாகவும் இருந்த அன்புத் துணைவரே! நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனாலும் ஓராயிரம் ஆண்டு ஆனாலும் மறக்கமுடியுமா? உமது நினைவலைகள் மண்ணில் நாம் உள்ளவரை மாறாது.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்;

**இன்னுயிர் மனைவி யோகா, இனிய செல்வங்கள்;**
**திவ்யா, கணாதிபன், திபர்னா, அன்புமாமா,**
**அருமை மச்சான்மார், பிரான்சில் உள்ள மைத்துனர்,**
**மைத்துனிமார் குடும்பங்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்,**

இ. சோமசுந்தரம்,
68/7, மில் லேன்,
கொக்குவில் கிழக்கு.
(46603)

---

## ஈசன் கல்வி நிலையம்

**K. K. S. கோண்டாவில்**

**A/L 99**
கலைப்பிரிவு
**தமிழ்:** திரு. லிங்கம்
**இந்துநாகரிகம் இந்து சமயம்:**
திரு. சிவானந்தன்
**நாடகமும் அரங்கியலும்:**
திரு. சந்திரன்
**அளவையியல்**
திரு. சர்மா

ஆரம்பம்: 05-05-97
திங்கள் மாலை 3.30 மணி


கணக்கியல்
**திரு. பாலவாசன்**

**A/L96 DAY**
முன்னுரிமைப் பங்கு மீட்பு
**ஆரம்பம்:**
03-05-97 - சனி
10. 30 - 12. 30

- நிர்வாகி -
(46595)

---

## 20 - வது ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 05 - 07 - 1950 | 01 - 05 - 1977 |

### அமரர் குமரய்யா தேவராஜன்
(முன்னாள் விற்பனைத் திணைக்கள அதிகாரி)

அன்புக்கு இலக்கணமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து திடீரென எங்களை விட்டு மறைந்த அன்புத் தெய்வத்துக்கு எங்கள் கண்ணீர்ப் பூக்கள் சமர்ப்பணம்.

**அன்பு மனைவி, பிள்ளைகள்.**

28, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(46597)

---

## முக்கிய அறிவித்தல்

பல்லாண்டு காலமாக மக்களின் நல் ஆதரவையும், அபிமானத்தையும் பெற்றுக் கொண்ட எமது தயாரிப்பான

### "க. மு. ஸ்ரீமார்க் மண்டான்" சுருட்டுக்கள்

சிறிது கால இடைவெளிக்குப் பிறகு புத்தாண்டுடன் வெளிவருகிறது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதனை எமது சுருட்டு விற்பனையாளர், பாவனையாளர், ஆதரவாளர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

எமது பெயரில் தரம் குறைவான போலி சுருட்டுக்கள் உலாவுகின்றபடியால் சுருட்டு வாங்கும் போது காரம், மணம், குணம் நிறைந்த தரமான

**"க. மு. ஸ்ரீமார்க் மண்டான்" சுருட்டுக்களையே**
கேட்டு வாங்கி உபயோகியுங்கள்.

கீழ்க்காணும் எமது விற்பனைப் பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை ஏக விநியோகஸ்தர்: ரட்ணம் வெற்றிலைக்கடை (கனகரத்தினம்)
மக்கள் சந்தை — பருத்தித்துறை.

| பருத்தித்துறை | நெல்லியடி |
|---|---|
| புலோலி (M. P. C. S), புலோலி | திருமகள் ஸ்ரோர்ஸ் |
| வேலவன் ஸ்ரோர்ஸ் | ஜமுனா ஸ்ரோர்ஸ் |
| விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் | பிள்ளையார் ஸ்ரோர்ஸ் |
| நாதன் ஸ்ரோர்ஸ் | ஆனந்தா ஸ்ரோர்ஸ் |
| அம்பாள் ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) | அம்பிகா ஸ்ரோர்ஸ் |
| (N.E W.) குமாரி ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) | கிருஸ்ணானந்தம் ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) |
| ராஜா ஸ்ரோர்ஸ் | சிங்கம்ஸ் ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) |
| கிருஷ்ணன் ஸ்ரோர்ஸ் (குமார்) | நாதன் ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) |
| ரதி ஸ்ரோர்ஸ், மெயின் வீதி | விநாயகர் ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) |
| 'கிறிஸ் கபே', மெயின் வீதி | சர்வானந்தா ஸ்ரோர்ஸ் |
| ரட்ணம்ஸ் ஸ்ரோர்ஸ் திக்கம் மார்க்கெற் | புதிய அம்பிகா ஸ்ரோர்ஸ் |
| குட்டி கடை (S. V. R) மார்க்கெற் | ஜெகா ஸ்ரோர்ஸ் |
| செல்வராசா மீன் மார்க்கெற் | உதயம் ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) |
| ஆனந்தன் வெற்றிலைக்கடை, மார்க்கெற் | கரன் ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) |
| 'சிவாறேடிங் சென்ரர் பஸ் நிலையம் | அபிராமி ஸ்ரோர்ஸ் (மார்க்கெற்) |
| மார்க்கண்டு, புற்றளை | ஸ்ரீ ஐங்கரா ஸ்ரோர்ஸ் |
| கணபதிப்பிள்ளை களஞ்சியம், பஸ் நிலையம், பளை. | உடுப்பிட்டி (M. P. C. S), உடுப்பிட்டி |
| | திசா ஸ்ரோர்ஸ், நெல்லியடி. |
| சுவாமிநாதன், தும்பளை, பருத்தித்துறை. | — |
| புவிதரன் கிறிஸ்ரல் றேடிங், புலோலி தெற்கு | — |
| 'உதயசிறி ஏஜென்சி' தும்பளை, பருத்தித்துறை | — |
| S.K. கம்பனி, கொழும்பு வீதி, கண்டி | — |
| கல்யாணி ஸ்ரோர்ஸ், கொழும்பு வீதி, கண்டி | — |
| செல்வம் (NO- 111) மார்க்கெற், கண்டி | — |


**புதிய விலைப் பட்டியல் 01 - 05 - 1997 இல் இருந்து**

★ 1 பண்டில் சுருட்டு 450/-
★ 1 கட்டு சுருட்டு 19/-
★ 100 சுருட்டு 180/-
★ 1 சுருட்டு 2/-

**மண்டான் சுருட்டு நிர்வாகம்,**
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
[46555]

---

## ஓராண்டு நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### கமலாதேவி தியாகராஜா
(Rasam Transport உரிமையாளரின் மனைவி)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 17 - 09 - 1936 | 11 - 05 - 1996 |

திதி: 01 - 05 - 97

அன்புமிக்க அன்னையாய் நம்மை
பண்பு வழி நடக்க வைத்து
மண்ணிலிருந்து வாழ்ந்த காலம்
எண்ணி நிறைந்ததனால் நீர்
விண்புகுந்து ஆண்டு ஒன்று
கண்ணிருந்து நிழலாடும் அம்மா!
மன்னவனின் தாள்களிலே உங்கள்
ஆத்மா சாந்தி பெற வேழமுகத்தானை
மனங்கலங்கி கண்ணீர் சொரிய
வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
**பாசமிகு கணவன், பிள்ளைகள்.**

இல. 25, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(46592)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ஜோன் மேஜர் இன்றுடன் விடை பெறுவாரா?

லண்டன், மே 1

தனது பதவிக்காலம் முடிந்து இன்று நடைபெறும் தேர்தலில் தோல்வியைச் சந்திக்கப்போவதாகக் கணிக்கப்படும் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் நேர்மையானவர் என்றும் —

முன்னாள் பிரதமர் இரும்புப் பெண்மணி திருமதி மாகிறெட் தட்சரின் கொள்கைகளைஅப்படியே கடைப் பிடித்தவர் அப்படியே கட்டிக் காத்தவர்; என்றும் —

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் உலகம் கண்டுள்ள சாதனைகளை சாதகமாக்சிக் கொண்டு ஆக்க பூர்வமான புரட்சிப் பணிகளைச் செய்யத் தகுதி பெற்றவர் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டு வந்தார்.

ஆனால் இப்போது 2 ஆம் உலகம் போரின் பின்னர் பிரிட்டனில் பிரதமர் பதவி வகித்தவர்களில் ஜோன் மேஜரைப் போன்று யாரையும் படுமோசமாக கேலி, கிண்டல் பரிகாசம் செய்து பத்திரிகைகள் வர்ணித்ததில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதிக பெரும்பான்மையுடன் பதவியைப் பிடித்த மேஜரின் கண்முன்னேயே அவர்களது ஆதரவாளர்கள் அவரை விட்டு விலகிச் சென்று அவரது அரசு சிறுபான்மை அரசாக மாற்றும் வரை அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது வாளாவிருந்தார். தற்போது பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் அவரைவிடச் செல்வாக்குச் சரிந்தவர்கள் யாருமே இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று நடைபெறும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் ஜோன் மேயர் தோற்கடிக்கப்படுவார் எனவும் தொழிற்கட்சியின் ரொனி பிளயர் வெற்றி பெறுவார் எனவும் பரவலாகக் கணிக்கப்படுகிறது. (ஐ-10)

# ஹமாஸ் இயக்கம் கண்டனம்

ஜெருசலேம், மே 1

பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாத இயக்கம் அதிபர் யாசீர் அரபாத்துக்கு எதிராகவே போர்க்கொடி உயர்த்தத் தொடங்கிவிட்டது.

ரெல் அவிவ் தற்கொலைக் குண்டுவெடிப்புத் தொடர்பாக அந்த இயக்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இஸ்ரேல் இராணுவத்துக்கு அரபாத் அளித்த ஒத்துழைப்பினை அந்த இயக்கம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

யாசீர் அரபாத்துக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் ஹமாஸ் இயக்கம் கலந்துகொள்ள மறுத்துள்ளது. (ஐ-10)

# நோர்வே மீது அரபாத் அதிருப்தி

ஜெருசலேம், மே 1

நோர்வே நாட்டிற்கு விஜயம் செய்ய இந்த பலஸ்தீன அமைச்சர்களின் பயணத்தை ரத்துச் செய்யுமாறு பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத் உத்தரவிட்டுள்ளார்.

பலஸ்தீனப் பகுதிகளில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு கடந்த வெள்ளிகிழமை ஐ.நா. சபையில் இஸ்ரேலுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து 134 நாடுகள் வாக்களித்தன.

அமெரிக்கா, இஸ்ரேல், உட்பட மூன்று நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

ஆனால் நோர்வே உட்பட்ட 11 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. நோர்வேயின் உறுதிப்பாடற்ற நிலைப்பாட்டினைக் கண்டிக்கவே அரபாத் தனது அமைச்சர்களின் பயணத்தை ரத்துச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கடும் பாதுகாப்புடன் பிரிட்டனில்தேர்தல் வாக்களிப்பு இன்று

லண்டன், மே 1

கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் மேதினமான இன்று பிரிட்டனில் பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

பிரதமர் ஜோன் மேஜர் தலைமையிலான ஆளும் கன்ஸர்வேட்டிவ் கட்சியின் ஆட்சி இன்றைய தேர்தல் மூலம் முடிவுக்கு வரும் என்றும் —

டொனி பிளேயர் தலைமையிலான தொழில் கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதிநேரம் வரை எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் சாத்தியமாகும் பட்சத்தில் 659 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியான தொழில் கட்சி 265 ஆசனங்கள் மேலதிகமாகக் கிடைக்கும் என நம்பப்படுகிறது.

இதே வேளை — இன்றைய வாக்களிப்பை ஸ்தம்பிக்கச் செய்ய ஐ. ஆர். ஏ இயக்கம் எடுக்கக்கூடிய எல்லா முயற்சிகளையும் தடுக்கவும் சமாளிக்கவும் விரிவான விசேட பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# மும்பாய், காட்மண்டுவில் வளியில் பெரும் மாசு!

நியூயோர்க், மே 1

தென்னாசிய நகரங்களில் காற்றில் பெருகிவரும் மாசுகள் அபாய அளவை எட்டுவதாக உலக வங்கி எச்சரித்திருக்கிறது.

குறிப்பாக இந்தியாவின் மும்பாய், நேபாளத்தின் காட்மண்டு ஆகிய நகரங்களிலேயே இதனால் பெரும் சுற்றுச்சூழல் ஆபத்து உருவாகியிருப்பதாக அது சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த இரு நகரங்களிலும் வீதி வாகனங்களின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகாலப் பகுதிக்குள் இரு மடங்காக அதிகரித்து விட்டதே வளி மாசடையக் காரணமாகி உள்ளது.

காற்று மாசடைவதால் மும்பாய் நகரில் சுகாதாரச் செலவுகள் மட்டும் சுமார் 600 மில்லியன் டொலர்களாகும் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. (ஐ)

# பாகிஸ்தான் யோசனை

இஸ்லாமாபாத், மே 01

காஷ்மீருக்காக ஆயுதங்களைக் குவித்துக் கொண்டிருக்கும் இந்தியாவும் பாகிஸ்தானும் அதற்காக விரயமாக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை மக்கள் நலனுக்காக மாற்றிட வேண்டுமென பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் தீர்வுக்கான...

(மூன்றாம் பக்கத் தொடர்) செயற்படுத்தப்பட்ட போதிலும் இன்று, பெரும்பான்மைத் தொழிலாளர்வர்க்கத்னரை நட்டாற்றில் கைவிட்ட நிலையையே கண்டுள்ளன.

எமது தமிழினத்தின் தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர் யாவருமே திட்டமிடப்பட்ட வகையில், அகதி எனும் ஒரே வர்க்கமயமாக்கப் பட்டுள்ளனர். அகதி முகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும், அந்நிய ஊர்களிலும், தேசங்களிலும் தஞ்சமடைந்துள்ள இந்த மக்களால் எங்கனம் தொழிலாளர் எழுச்சி தினத்தை நினைவுபடுத்திக் கொள்ளவோ அன்றி கொண்டாடவோ முடியும்? சம்பள உயர்வு, தனியார் மயப்படுத்தல் மீதான தடை, வாழ்க்கைச்செலவும் புள்ளிக்கேற்ற மேலதிக கொடுப்பனவும் போன்ற கோரிக்கைகளுக்காக தென்னிலங்கைத் தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கும் போது எமது தேசத்துதொழிலாளர்கள் மட்டும் உயிர்வாழ்வதற்கும், மூன்று வேளைக்கஞ்சிக்காகவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்த வரலாறு உடையது எமது இனம். இன்று ஒருவாய் உண்டு அதுவும் பரவாயில்லை என்று முகாம்களில் சுருண்டு கிடக்கின்றது.

**யுத்த மேகம் விலகிச் செல்லும்**

தெற்கின் இனவாத அரசியல் தலைமைகள் தறிகெட்டு ஆடிய அரசியல் சூதாட்டத்தில் பலியாகிப் போன சிறுபான்மைத் தமிழினம் தனி மனித நலன்களைப் பேண முயலும், தேசிய வாத முலாம் பூசிய இராணுவ அமைப்பு ஒன்றின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளக்கூடிய அல்லது அத்தலைமையை நிராகரிக்கக்கூடிய தைரியத்தை தமக்குள் வரவழைத்துக் கொள்ளக்கூடிய ஒரு முறையான அரசியல் தீர்வொன்றே எமது தேசத்தின் மீது கவிந்துள்ள யுத்த மேகங்கள் படிப்படியாக விலகிச் செல்லும் சூழலை ஏற்படுத்தும்.

அவ்வாறானதோர்ஆரோக்கியமான சூழலே எமது மக்களின் பெரும்பான்மை தொழிலாளர் வர்க்கத்தின் உயிர்வாழும் உரிமையை உறுதிப்படுத்தும். ஒருதேசிய இனத்தின் விடுதலையில் ஒன்றிணைக்கப்பட வேண்டிய சக்திகள் தெளிவாக இனம் காணப்பட்டமையும், உழைக்கும் மக்களினதும் மாணவர்களினதும், புத்திஜீவிகளினம் தலைமையில் பரந்துபட்ட வெகுசன அணிதிரட்டலுக்குட்பட்டு காத்திரமான ஆரோக்கியமான போராட்ட சக்திகள் வளர்த்தெடுக்கப் பட்டமையும் அரசியல் இலக்குகளை வென்றெடுக்கக் கூடிய போராட்ட வடிவங்கள் புகுத்தப்பட்டமையும் துரதிர்ஷ்டவசமாக, பாசிசயுத்த தந்திரோபாயங்களின் அடிப்படையினான சகோதரப் படுகொலைகள் மூலம் விடுதலைக்கு அத்தியாவசியமான ஐக்கியம் உட்பட இவை அனைத்தும் சின்னாபின்னப்படுத்தப் பட்டமையுமே இன்றைய எமது நிலைக்கான காரணங்களாகும்.

- மீண்டும் அத்தகைய ஒற்றுமையானதோர் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.
- இனத்தின் சகல பிரிவு மக்களினதும் குறைபாடுகள், இனவாத அடக்கு முறைகள், போரினால் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் யாவும் விலாவாரியாக வெளிச்சம் போட்டுக் காட்டப்படவேண்டும்.
- அரசியல் தீர்வை வலியுறுத்தும் போராட்டங்களிலும் அதற்கான அணிதிரட்டல்களிலும் தொழிலாளர் வர்க்கத்தினரது சகல பிரிவினரும் அரவணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- பெரும்பான்மைத் தொழிலாளர் வர்க்கத்தினர் முகங் கொடுக்கும் சீரழிப்பு நடவடிக்கைகளுக்கான உடனடி நிவாரணங்களும் நிரந்தர தீர்வும் உடனடியாக நடைமுறைப் படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

இவற்றின் மூலமே வட-கிழக்கில் வாழும்தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கம் தனது உரிமைகளை வென்றெடுக்கும் நீண்ட போராட்டப் பாதையில் பிரதான தடையை அகற்றிக் கொள்ளலாம். அதுவே எமக்குள்ள பிரதான கடமையாகும் என்று இன்றைய தொழிலாளர் எழுச்சித்தினத்தில் உறுதி கொள்வோம். ★

# தமிழ் இயக்கங்கள்...

(மூன்றாம் பக்கத் தொடர்) வாழ்வு முகாம்கள், அநுராதபுரம் சிறைச்சாலை என மக்கள் அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

வடக்கில் கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்படுகிறார்கள். அநுராதபுரம் வரும் பெற்றோர், உற்றார், உறவினர்கள் தாம் தமிழர்கள் என்பதற்கான லட்சணங்களை அழித்து விட்டுத்தான் வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து தமது பிள்ளைகளை தேடி வருவதற்கான அனுமதி பெறுவதில் உள்ள கஷ்டங்களினாலும், மற்றும் பொருளாதார கஷ்டங்களினாலும் பல கைதிகள் அநாதரவு நிலை அடைந்துள்ளார்கள். அவர்களுக்கு பிணைப்பணம் செலுத்துவதற்கு யாரும் வராததால் திரும்பவும் சிறைச் சாலைகளில் அடைக்கப்பட்டவர்கள் பலர்.

இதே வேளையில் 15,000 இற்கும் மேற்பட்ட இடம் பெயர்ந்த மக்கள் வவுனியா முகாம்களில் சொல்லொணா கஷ்டங்களை அனுபவித்த வண்ணம் முட்கம்பி வேலிகளுக்குப்பின் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். பலர் 5 அல்லது 6 மாதங்களுக்கு மேலாக இவ்வாறு வாழ்கின்றார்கள்.

யாழ்ப்பாணமும், மட்டுநகரும் சில நூறு யாருக்கொரு சோதனைச் சாவடிகள் கொண்ட நகரங்களாக மாறியுள்ளன. குறுகிய நேர நாளாந்த வாழ்க்கையில் கணிசமான நேரம் சோதனைச் சாவடிகளிலும் பாஸ் பெறும் இடங்களிலும் கழிகிறது.

எங்காவது ஒரு கைக்குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம் சாதாரண மக்களின் உயிர்களை பலி கொண்டு விடுகிறது. இதில் வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகள் என்ற விதிவிலக்கு கிடையாது. வயல், வயல். சார்ந்த இடங்களிலும், கடல் கடல்சார்ந்த இடங்களிலும் யுத்தம் உக்கிரமாக நடைபெறுவதால் மக்களின் பொருளாதார வாழ்வு அடியோடு ஸ்தம்பித்துள்ளது. சமூகத்தின் முதுகெலும்பான இந்த மனிதர்கள் தரித்திரர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

இத்தகைய இடர்மிகு சூழ் நிலையிலும் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்ற குரல்கள் வலுவிழந்து விடவில்லை. அடுத்த வரவுசெலவுத் திட்டத்திற்கு முன்னர் தீர்வுத் திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுவிடும் என்கிறார் பீரிஸ்

ஆனால் தீர்வுத்திட்ட யோசனைகளில் அடிப்படையான விடயங்கள் பற்றிய சில கேள்விகள் கேள்விகளாகவே இருந்துகொண்டு இருக்கின்றன!

1. வட-கிழக்கு இணைப்பு.
2. பிராந்திய அரசை கலைத்துவிடுவதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரம்.
3. சமஷ்டியா, ஒற்றையாட்சியா என்பது.
4. பௌத்தத்திற்கு சிறப்பிடம் — விசேட அந்தஸ்து.
5. காணிகள் பகிர்ந்தளிப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள இடைச் சேர்க்கைகள்.
6. சட்டம் ஒழுங்கு, சிவில் அதிகாரங்கள்.

இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன.

ஆனால் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் மூலம் யுத்தத்தை முடிவுக்குகொண்டுவந்து சமாதானத்தீர்வை கொண்டு வரும்படியே மக்கள் தமது தீர்ப்பைப் வழங்கியுள்ளார்கள். எல்லைக் கிராமசிங்கள மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களித்த விதம் இதனை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

அதற்குமேல் நம்பிக்கை தருவதாக பொதுஜன முன்னணியும், ஐ.தே. கட்சியும் பிரச்சினையை தீர்ப்பதில் அனுசரணையாக இருப்பது என்ற முடிவும் அதற்கு யார் பின்னணியில் இருந்தாலும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

**தமிழ் இயக்கங்கள் மத்தியில் புரிந்துணர்வு**

ஆனால் தமிழ் மக்கள் தரப்பில் தான் ஆரோக்கியமாக எதுவும் தெரியவில்லை. உருப்படியாக, தமிழ் மக்களுக்கு ஏதும் கிட்டவேண்டுமானல் தமிழர் இயக்கங்கள் தமக்கிடையே ஒரு புரிதலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக புலிகள் இயக்கம் ஜனநாயகத்தை அங்கீகரிக்க வேண்டும்.

அதே போல் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் நேர்மையாக நடந்து கொள்ள முன்வர வேண்டும். யாருக்கு? எதற்கு? என்று கேட்கலாம் தமிழ் மக்களுக்கு தமிழ் மக்களின் நலன்களுக்கு. இல்லையேல் நிலைவரம் இன்னும் மோசமாகலாம். தற்போது அழிவின்விளிம்பில் நிறுத்தப் பட்டிருக்கும் எமது சமூகம் மேலும் மோசமான நிலைக்கு தள்ளப்படலாம்.

உருவாகிவரும் நம்பிக்கைகளை இந்த மேதினம் கானல் நீராக்காமல் இருக்கட்டும். அதற்கு நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

தமது மக்களின் விடுதலைக்காக உயிரைத்தியாகம் செய்த பொதுமக்கள் போராளிகளின் மரணங்களுக்கு அர்த்தமுள்ள யதார்த்தவடிவம் கொடுப்பதானால் சந்தர்ப்பம் இதுதான். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

SA - 1, SA - 5, SA - 35, SA - 8 (JAPAN) ஆகிய புதிய ஓர்கன்களும், ஆர்மோனியன்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- கற்பகப் பிள்ளையார் கோயிலடி 23, குறோசன்ற் வீதி, சுண்டுக்குளி. (கல்விவலயம் 1 இன் அலுவலகத்துக்குஅருகாமை). (46573)

திண்டுக்கல் இரும்புப் பெட்டியும் (IRON SAFE) வீணையும் விற்பனைக்குண்டு. தொடர்பு; த. செல்லையா, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (47203)

Suppercup CD 50 Honda மோட்டார் சைக்கிள் (பதிவு செய்யப்பட்டது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு; கற்பகப் பிள்ளையார் கோயிலடி 23, குறோசன்ற் வீதி, சுண்டுக்குளி (கல்வி வலயம் 1 இன் அலுவலகத்துக்கு அருகாமை). (46572)

C - 50 இரண்டு மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஸ்ரீதேவி சலூன், பலாலிவீதி, ஆலடிச் சந்தி, கந்தர்மடம். (46598)

வளர்ப்பு மீன் வகைகள் 'கோல்ட்பிஸ்' மற்றும் பல வகை மீன்வகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐ. குட்டி 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை.) (46599)

எமது சங்கத்தில் வெற்று உரப்பை 1500 உம், சாக்கு 1500 உம் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் கீழ்க்காண் விலாசத்தில் பார்வையிடலாம். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/ 643)

### விசேட ஆங்கிலம்

வாரம் 3 வகுப்புக்கள், மாதாந்த பரீட்சைகள் உட்பட ஆண்டு 3, 4, 6, 8 வகுப்புக்களில் மாத்திரமே இடமுள்ளது. த. சகாதேவன், B. A. (Lon ) 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை. (46071)

### விற்பனையாகின்றது

கவின் கலை அழகியற்கல்வி புது முறைச் சித்திர பாட, 1000 வினாக்களும் விடைகளும் ரூபா 75/-ஆக்கியோன்: எஸ். தங்கராசா(புது முறைச் சித்திர ஆசிரியர், நெல்லையூர்), ஓவியக்கழக வெளியீடு. [46528]

வரலாறு ஆண்டு — 9 அலகுரீதியான முழுப்பாடத் திட்ட வினா விடை, ரூபா 30/- ஆக்கம்: கே. எஸ். முத்துலிங்கம், எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். [46529]

### சிங்களம்

புதிய பிரிவு முதற்கட்ட 3 மாத வகுப்பில் சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். ஆரம்பம்: 2-5-97 வெள்ளி பிற்பகல் 5. 00 மணி. த. சகாதேவன், 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை. (46570)

### இசைவகுப்புக்கள்

ஓர்கன். கிற்றார், றம்ஸ் இசைக்கருவிகளில் பயிற்சி அளிக்கப்படும். தினசரி காலை - மாலை வகுப்புக்கள். துர்க்கா மில் அருகாமை, மெயின் வீதி, கட்டுடை, மானிப்பாய். [46577]

ஓர்கன், மெலோடிக்கா இசைக்கருவிகளில் பயிற்சி அளிக்கப்படும். சனி- மாலை ஞாயிறு - காலை வகுப்புக்கள். ஞானச்தன், No - 1, 5ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [46576]

### சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும்தீர, விவாகத்தடை, கல்வித்தடை, தொழில் தடை நீங்க ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். குருக்கள், பொய்யாமொழி சோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர். [46553]

சாதகக் குறிப்புகள் எழுத, எதிர்கால வாழ்க்கை வசதிகள், சிறப்புக்கள் பற்றி ஆராய, திருமணப்பொருத்தங்கள் பார்க்க. சிவா சோதிடம், 158, கோயில் வீதி, முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம். [46552]

### பௌதிகம்

97 (வினாவிடை). 98,99, ஆண்டுகளுக்கான தனிப்பட்ட, குழு வகுப்புக்கள் கற்பிக்கப்படும். S சுகேந்திரன் B.Sc. (Special In Physics) இடங்கள், (கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகில் கோயில் வீதியில்) தொடர்பு: 10/1, செட்டியார் ஒழுங்கை, நல்லூர், 36/20, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. [46593]

### பேட்டுக் கோழி

6, மாதம் நிரம்பிய சேவர் இன கறுப்பு பேட்டுக்கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு: R.S.K. கோழிப்பண்ணை, முருகபதி, உடுவில், சுன்னாகம் (மான்ஸ் பாடசாலை அருகில்). [46568]

### ஆண்டு - 5 புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் புதிய பரீட்சைத்திட்டத்திற்கு அமைவான மாதிரி பயிற்சிகள் விடைகளுடன் ஒவ்வொரு வாரமும் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [46520]

### வாடகைக்கு

இந்து சைவபோசனமுள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு, நல்லூர் சுற்றாடலில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை. தொடர்பு:- க. ரவிகரன், இல. 17, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [46407]

## தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பெண் விற்பனையாளர்தேவை (மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்)

தொடர்பு:

**புதிய குறிஞ்சி மெடிக்கல்ஸ்**

பரமேஸ்வரா சந்தி

திருநெல்வேலி.

(46602)

## வெளிவந்துவிட்டது!

**கணிதப் பயிற்சி**

ஆண்டு 11

விலை: ரூபா 65.00

ஆக்கம்:

வி. ச, சுப்பிரமணியம்

வெளியீடு:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**

யாழ்ப்பாணம்.

[46531]

# விற்பனைக்கு

கைத்தறி நெசவுக்குரிய நூல்கள் விற்பனைக்குண்டு

| | |
|---|---|
| 1 KG | 1 KG |
| 16 S — 215/- | 40 S P. V. — 260/- |
| 50 S — 265/- | 75 D N. S. T — 260/- |
| 2 30 — 265/- | |

புதிய இந்தியன் LISTER MODEL 10 H. P என்ஜின்களும் அதற்குரிய உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு.

## ஸ்ரீ ராஜ்ரெக்ஸ் இண்டஸ்றீஸ்

வட்டு-கிழக்கு சித்தன்கேணி.

(46600)

யா/ உடுப்பிட்டி

## அமெரிக்கன் மிஷன் கல்லூரி முறைசாராக்கல்வி தொழிற்றிறன் அபிவிருத்திப் பயிற்சி - 1997

முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும்

"படவரைஞர் பயிற்சி"

க. பொ. த. (சா/ த) சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 09-05-97**

**நேர்முகத் தேர்வு: 12 - 05 - 97**

காலை 10-00 மணி.

அதிபர்,

யா/ உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.

(46604)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக மாணவி **ஜெயந்தியின்** பாசமிகு தந்தையார்

அமரர் சற்குணானந்தசோதியின்

மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆண்டு 10 நண்பிகள்**

யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(46594)

# நீங்கா நினைவலைகள்





அமரர்

**முத்தையா வல்லிபுரம்**

(ஸ்தாபகர்: திருமகள் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.)

தோற்றம்: 12 04—1919 மறைவு: 08—05—1991

அமரர்

**வல்லிபுரம் சிவசோதி**

(உரிமையாளர்: திருமகள் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.)

தோற்றம்: 18—05—1943 மறைவு: 13—06—1989

திதி: 01 - 05 - 1997

அன்பாய், ஆதரவாய், பண்பாய் எமைக் காத்து நின்ற தெய்வங்களே! இனி எப்பிறப்பில் உங்களைக் காண்போம்?

உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்.

திருமகள் சோதி வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(46591)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி செல்லத்துரை தையல்முத்து**

**(அன்னம்மா)**

மலர்வு: 19 - 05 - 1917

உதிர்வு: 01 - 04 - 1997

இல்லறம் புகுந்தவள் இன்புற்று
நல்லறம் செய்தவள் விடைபெற்று
சிவபுரம் சேர்ந்தாள் எமைவிட்டு

ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டிநிற்கும்!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சிவன் வீதி,
தோண்டாவில் வடக்கு.

(46584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மே நாள்

உலகத் தொழிலாளர் தினமான மே நாள் இன்றாகும். முழுக்க முழுக்கக் கொத்தடிமைகளாக அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த தொழிலாளர்கள் தமக்குரிய முக்கிய உரிமைகள் சிலவற்றைப் பெற்ற நாளை நினைவுபடுத்திக் கொண்டாடப்படுவதே மே நாள்.

உலகம் முழுவதிலும் வாழும் தொழிலாளர்கள், உழைக்கும் வர்க்கத்தினர் இன்றைய நாளைப் பிரமாண்டமான முறையில் கொண்டாடுவர். அவர்கள் தாம் ஏற்கனவே அனுபவிக்கும் பலவித, பலவகை உரிமைகளுக்கு மேலதிகமாக புதிய உரிமைகளையும் வசதிகளையும் வழங்குமாறு தத்தமது அரசுகளிடமோ அல்லது சம்பந்தப்பட்டவர்களிடமோ இன்றைய தினம் கோரிக்கைகளாக முன் வைப்பதுண்டு.

தொழிலாளர்களின் சங்கங்கள் — தொழிற் சங்கங்கள் —அவ்வப்போது தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராட்டங்களை நடத்துவது உண்டு. ஆனால் இப்போது தொழிற் சங்கங்கள் அனேகமாக அரசியல் கட்சிகள் சார்புடையனவாகவே இயங்குகின்றன.

இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் தொழிற் சங்கங்கள் அரசியல் சார்புடையனவாக, அரசியல் கட்சிகளுக்கு செல்வாக்கும் ஆதரவும் தேடிக் கொடுக்கும் அமைப்புகளாகவே செயற்படுகின்றன தொழிற்சங்கங்கள் தொழிலாளர் நலன் மட்டுமே கருதிச் செயற்படும் சுயேச்சையான, தனித்துவமான அமைப்புகளாக இயங்குவதே சிறந்தது.

உலகெங்கிலும் வாழும் தொழிலாளர்கள் தாம் உரிமை பெற்ற நாளைக் கொண்டாடும் போது, வடக்கு - கிழக்கு வாழ் தொழிலாளர்கள் அத்தகைய ஒரு மன நிலையில் இல்லை.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் தொழிலாளர்களில் அனேகர் தமக்கென ஒரு தொழிலைச் செய்ய முடியாதவர்களாகவே உள்ளனர். குறிப்பாக வடக்கில் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், சுயதொழில் என்று அனேகமாக சகல தொழிற்றுறைகளும் மந்த நிலையிலேயே உள்ளன. அதனால் மிகப்பெரும் எண்ணிக்கையினர் தொழிலின்றிக் கஷ்டப்படுகின்றனர். அகதிகள், இடம்பெயர்ந்தவர்கள் என்ற நாமத்துடன் தமது வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கு நிவாரண உணவுப் பொருள்களிலேயே தங்கியுள்ளனர்.

தமக்கு உரிமைகள் வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக, எங்களுக்கொரு தொழில் வேண்டும்; எங்கள் தொழிலைச் செய்வதற்கு உதவுங்கள் — வசதி செய்யுங்கள் என்று கேட்கும் நிலையிலேயே அவர்கள் உள்ளனர். கிழக்கிலும் இந்த நிலை இல்லாமல் இல்லை.

வடக்கு - கிழக்கு வாழ் உழைக்கும் மக்களின் இன்றைய இந்தப் பரிதாப நிலை அரசாங்கத்தினதும், தென்னிலங்கைத் தொழிலாளர்களினதும், தொழிற்சங்கங்களினதும் கவனத்தை ஈர்க்க வேண்டும். அரசாங்கத்தின் மீது அழுத்தம் போடக் கூடிய சக்தி தென்னிலங்கைத் தொழிற்சங்கங்களுக்கு உண்டு.

அவை இன்றைய மே தினத்தில் இது குறித்து ஆக்கபூர்வமான வழியில் சிந்தித்துச் செயற்படலாம்.

# முறைசாராக் கல்வித் துறையில் இம்முறை பல பயிற்சி நெறிகள்

வலிகாமம் தெற்கு, மே 1

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினர் இவ் வருடத்தில் அதிகமான தொழில் திறன் பயிற்சி நெறிகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கான இப் பயிற்சி நெறிகள் குடாநாட்டில் உள்ள பல பாடசாலைகளில் இம் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட உள்ளன.

உடையமைத்தல், தமிழ் சுருக்கெழுத்து-தட்டெழுத்து, ஆங்கில சுருக்கெழுத்து - தட்டெழுத்து, படவரைஞர் பயிற்சிநெறி (ஆங்கிலம்) படவரைஞர் பயிற்சிநெறி(தமிழ்) கணக்கியலும் கணக்குப்பதிவும், வானொலி— தொலைக்காட்சி பராமரிப்பு, மின்சார இலத்திரனியல், வீட்டு முகாமைத்துவம், மூலிகைப் பண்ணை, மோட்டார் பொறியியல், மோட்டார் இலத்திரனியல், கணனி பயிற்சி உட்பட பல்வேறு பயிற்சி நெறிகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. மேற்படி பயிற்சி நெறிகளை நடத்துவதற்கு பொருத்தமான போதனாசிரியர்கள் தெரிவு தற்போது அவ்வப்பாடசாலை அதிபர்கள் மூலம் கோட்டக்கல்வி அதிகாரிகளின் உதவியுடன் நடைபெற்று வருகின்றன.

பயிற்சி நெறிகளை நடத்த அனுமதி வழங்கப்பட்ட பாடசாலைகள் எந்தெந்த பயிற்சி நெறிகளை நடத்த முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு பொருத்தமான போதனாசிரியர்களை தெரிவு செய்து அவர்களின் தெரிவு விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார். (ஐ- 152)



சர்வதேச றோட்டறிக் கழக 3220 மாவட்ட ஆளுநர் றோட்டேரியன் மங்கள குணவர்த்தனவும், றோட்டறிக் கழகத்தின் கொழும்பு மேற்குக் கிளைத் தலைவர் றோட்டேரியன் ஜானக எதிரிசிங்கவும் யாழ். றோட்டறிக் கழகம் ஏற்பாடு செய்திருந்த ஒன்று கூடல் நிகழ்ச்சியை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேரியன் எஸ். சோதிலிங்கம், முன்னாள் தலைவர் றோட்டேரியன் க. கேசவன் ஆகியோரும் அருகில் உள்ளனர். (ஐ-3)

# புகையிலை, சணல் பயிரிட்டோர் தற்போதைய மழையால் பாதிப்பு

வலிகாமம் தெற்கு, மே 1

குடா நாட்டில் தற்போது பெய்து வரும் மழையினால் அனேக விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள்.

குறிப்பாகப் புகையிலை உற்பத்தியாளர்கள் இம் மழையினால் கூடிய பாதிப்பை எதிர் நோக்கியுள்ளனர்.

உடுவில், இணுவில், உரும்பிராய், தாவடி போன்ற பகுதிகளில் இம் முறை புகையிலைச் செய்கை அமோக விளைச்சல் கண்டிருப்பினும், மேற்படி மழையினால் அவை பாதிப்படைந்துள்ளன.

அனேக புகையிலைச் செய்கையாளர்கள் அறுவடை செய்த புகையிலையை காயப்போட முடியாத நிலையில் உள்ளனர்.

காயப் போட்ட புகையிலைகள் மழையில் நனைந்துள்ளன.

இதேவேளை வயல்களில் முற்றிய நிலையில் உள்ள சணல் பயிர்கள் அறுவடைக்கு தயாராக இருந்த போது மழை பெய்துள்ளதனால் சுத்தமான சணலைப் பெற முடியாமல் உள்ளது.

தற்போதைய பருவ காலத்தில் பூத்துள்ள அநேக மாமரங்களில் உள்ள பூக்கள் இம் மழையினால் கண்ணடைத்து, கருகிப்போகக் கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. (ஐ-152)

## நாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம், மே 1

சைவபரிபாலனசபை நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## முகமாலையில் அ. அட்டை விநியோகம்

தென்மராட்சி, மே 1

பளைப்பிரதேச முகமாலை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஒரு தொகுதியினரின் விசேட அடையாள அட்டைகள் இன்று வியாழக்கிழமை முகமாலை சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்படுமென கிராம அலுவலர் வே. வன்னியசிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-117)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 1

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராசா தலைமையில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-3)

### நாளை

**சித்திரை 19**

**வெள்ளிக்கிழமை**

திதி: தசமி

பிற்பகல் 12.45 வரை.

நட்சத்திரம்: சதயம்

பிற்பகல் 3.50 வரை.

சுபநேரம்: 5. 57 - 7.27

ராகுகாலம்: 10.27-11.57

[illegible]

## ஜே 77- 78 அ. அட்டை

யாழ்ப்பாணம், மே 1

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/77 மருதடி, ஜே / 78 அத்தியடி கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டை எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## முத்திரைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மே 1

யாழ். மாவட்டத்தில் நிலவிய முத்திரைத் தட்டுப்பாட்டை அடுத்து பெருமளவிலான முத்திரைகள் நேற்று எடுத்துவரப்பட்டன.

பெறுமதி கூடிய முத்திரைகள் உட்பட சாதாரண முத்திரைகளும் நேற்று விமான மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன என்று பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (இ-3)

## பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே. 1

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு பயணிகள் கப்பல் சேவை ஒன்று இன்று இடம்பெற இருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 552 முதல் 560 வரை உள்ளவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

கப்பலில் செல்ல பதிவு செய்து அனுமதி கிடைப்பவர்கள் சிவில் அலுவலகத்தில் தமது ப்பயணத் திகதியை உறுதி செய்த பின்னர் பயண ஏற்பாட்டுடன் வரவேண்டும் என்றும்—

பயணத்திகதியை உறுதி செய்யாமல் ரயில் நிலையத்துக்கு வர வேண்டாம் என்றும்— கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## பரிசுத்த ஜெபம்

யாழ்ப்பாணம், மே 1

சௌக்கிய கரிசனை, கிறிஸ்தவ ஐக்கியம், கிறிஸ்துவுக்காக இளைஞர் ஆகியன இணைந்து நடத்தும் பரிசுத்த ஐக்கிய உபவாச ஜெபம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஐ-4)

## 132 பேர் குருநகர் வந்தனர்

நாச்சிக்குடாவிலிருந்து 43 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேர் படகுகள் மூலம் நேற்று குருநகர் வந்து சேர்ந்தனர். (இ-100)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 1

யாழ். மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் ஏற்பாடு செய்து கல்லூரி மண்டபத்தில் நடைபெற்று வரும் 1997ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தர வர்த்தக மாணவர்களுக்கான கருத்தரங்குத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் வணிகப் புள்ளி விவரவியல் (தரக்கட்டுப்பாடு) என்பது பற்றி விரிவுரையாளர் செல்வி நித்திய லக்ஷ்மி கருத்துரையாற்றுவார். (இ-4)

### சாயி சிந்தனைகள்

ஓம் சாயிராம்

இதைப்பற்றிக் கொஞ்சம் சிந்தியுங்கள். நீங்கள் இந்த உடம்பில், இந்தப் பாத்திரத்தில் அவதரித்திருக்கிறீர்கள்- உங்கள் உண்மையான தத்துவமாகிய கடவுளை அறிந்து கொள்வதற்காக.

பட்டுப்பூச்சியின் கூட்டையொத்த இந்த உடம்பு உங்கள் வாசனைகள், ஆசைகள் என்ற நூலால் கட்டப்பெற்றது. இறகுகளை வளர்த்து அந்தக் கூட்டிலிருந்து தப்புவதற்காக, அந்தக் கூடு இருக்கும் வரை அதைப் பயன்படுத்துங்கள்.

இந்த உலகில் தள்ளப்பட்டதன் கவலையை அறிவிப்பதற்காக, அழுது கொண்டு பிறந்தீர்கள். அந்தக் கவலையை ஏற்படுத்தியது எது?

கடவுளை உங்கள் பிடியிலிருந்துவிட்டு விட்டோமே என்பது தான் அந்தக் கவலை பிறப்போடு கொண்டுவந்த அந்தக் கவலையை திரும்பவும் இங்கிருந்து கொண்டு போகக் கூடாது என்று தீர்மானியுங்கள்.

இந்தப் பிறப்பிலேயே அதைத் தள்ளி விடுங்கள். (ஆதாரம்: Sathya Sai Speaks)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நகரில்....

பாட்டா, D. S. I., றன்பா பாதணிகளையும் மற்றும் பாடசாலைகளுக்குரிய பாதணிகளையும் புதிய டிசைன்களில் தரமானவையாக நிதானவிலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்:

**கபிலா காலணியகம்**
**4, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(46610)


உ
அம்மன் துணை

## வேவிலந்தை
## ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
அல்வாய்

**22-01-97** இல் கூட்டிய நிர்வாக சபைக் கூட்டத்தில் பின்வருவோர் பரிபாலன சபை உறுப்பினராக ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**தலைவர்: திரு ச. பரமேஸ்வரன்**
**செயலாளர்: திரு வே. பரராசசிங்கம்**
**பொருளாளர்: திரு நா. சந்திரசேகரம்**
**உறுப்பினர்: 1. சோ. விவேகானந்தம்**
**,, 2. தி. சிதம்பரநாதன்**

வே. பரராசசிங்கம்
செயலாளர்.

(சி/649)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
### யோசப் வின்சன்ட் பொன்னையா
(ஆய்வு கூட உதவியாளர், புனித பத்திரிசியார் கல்லூரி)

எமது சக ஊழியன் யோ. வி. பொன்னையா அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர்,**
**அலுவலக ஊழியர்கள்.**

புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம். (46620)

## மரண அறிவித்தல்கள்

### யோசப் வின்சன்ட் பொன்னையா
(ஆய்வுகூட உதவியாளர், புனித சம்பத்திரிசியார் கல்லூரி)

யோசப் வின்சன்ட் பொன்னையா 27- 04- 97 இல் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று 01- 05- 97 வியாழன் பி. ப 3. 00 மணிக்கு (புதிய நேரம்) அன்னாரின் இல்லத்திலிருந்து புனித சம்பத்திரிசியார் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கமலா (மனைவி)

838, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (46619)

### சுப்பையா பொன்னம்மா

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பையா பொன்னம்மா 29-04-97இல் காலமானார்.

இவர் சுப்பையாவின் அன்பு மனைவியும், நவமணி, இராசமணி, சுப்பிரமணியம் (கடற்றொழில் இலாகா, யாழ்ப்பாணம்), மனோன்மணி (இத்தாலி), தவமணி (கனடா), காண்டீபன் (கனடா), ஈஸ்வரன் (சுவிஸ்), உருத்திரன் (நோர்வே), நளினி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமலர் (கைதடி), கணபதிப்பிள்ளை (பாரிஸ்), நவரத்தினம் (இத்தாலி), சோதி (கனடா), பத்மவிஜிதா (கண்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேஸ், வேணுகாந்தன் (பொறியியல் - விரிவுரையாளர், பெரதேனியா பல்கலைக்கழகம்), றமேஸ் (கனடா), பிரதீபா, கௌசிகா, பார்த்திபன், தக்சனா (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-04-97 புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊத்தல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
சுப்பையா
(கணவன்)

தட்டாங் கலட்டி,
கைதடி. (46606)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-05-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### குடாநாட்டில்...
(முதலாம் பக்கத் தொடர்)

வும்—

ஈ. பி. டி. பி. அரசியல் அமைப்பாளர் என். மனோகரன், உதவி அமைப்பாளர் என். லோகன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், ஈ. பி. டி. பி. தீவக இராணுவப் பொறுப்பாளர் எஸ். ரங்கன், முன்னாள் இளைப்பாறிய அதிபர் ரட்ணராசா, ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் தங்கவேல், வேலணை உதவி அரச அதிபர் கே. கே. சந்திரன், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அருளப்பு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் விழாவில் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

புளொட்டின் மே தின விழா இன்று பிற்பகல் 3-00 மணிக்குக் குருநகரில் நடைபெறும்.

புளொட் அமைப்பின் வடமராட்சி, தென்மராட்சி அமைப்பாளர் பூ. முத்தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் 15 தொழிற்சங்க, வெகுஜன அமைப்புகள் கலந்து கொள்ள உள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தனது பிரதான மே தின விழாவை இம்முறை மட்டக்களப்பில் நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (இ-15)

### இன்னும்...
(முதலாம் பக்கத் தொடர்)

தின் போது எந்த வித நிர்ப்பந்தத்துக்கும் தாம் அடிபணியப் போவதில்லை என்றும் ஜனாதிபதி, தெரிவித்தார்.

சில அமைச்சுக்களின் பணிகள் குறித்தும் அவர் அதிருப்தி வெளியிட்டார்.

அமைச்சுக்களின் பெயர்களைக் கூறாமல் அவற்றுடன் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் பெயரை ஜனாதிபதி குறிப்பிட்டார்.

குறிப்பிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களை மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மறைமுகமாகத் தெரிவித்தார்.

பல அமைச்சுக்களை ஒருவர் வைத்துக் கொண்டு அந்த அமைச்சுக்களுக்குச் சொந்தமான வாகனங்களை எல்லாம் பாவிப்பதாகக் கூட ஜனாதிபதி கண்டித்தார். (அ-150-3)

### கோணேசர்...
(முதலாம் பக்கத் தொடர்)

''வற்புறுத்துதலின்பேரிலா? அல்லது சுயவிருப்பத்தின் பேரிலா? வாக்குமூலம் அளிக்கப் போகிறீர்'' என்று நீதிவான் அவரிடம் கேட்டார்.

சுயவிருப்பத்தின் பேரில் வாக்குமூலம் அளிக்கப்போவதாக அவர் பதில் அளித்தார்.

இதனை அடுத்து இரகசிய வாக்குமூலம் அளிக்க நீதிவான் ஏற்பாடு செய்தார்.

### பௌசி...
(முதலாம் பக்கத் தொடர்)

சர் பதவி வழங்கப்பட இருப்பதாகவும்—

தொழிலாளர் தினமான இன்றே தொழில் அமைச்சர் பதவி மஹிந்தராஜபக்ஷவிடமிருந்து பறிக்கப்படக்கூடும் என்றும்— வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று நேற்றுத் தெரிவித்தது. (அ-இ-3-10-150)

## வவுனியாவில் மோதல்

கொழும்பு, மே 1

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படையினர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை வவுனியாவில் இடம்பெற்றது.

இதே வேளை சண்டிலிப்பாய், புத்தூர் பிரதேசங்களில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் ஆயுதங்களையும் துப்பாக்கி றவைகளையும் கைப்பற்றியுள்ளார்கள் என்றும்—

புத்தூரில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற சம்பவத்தில் ஒரு படைவீரரும் குடிமக்களில் ஒருவரும் காயமடைந்தனர் என்றும்—

விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் சுடப்பட்டார் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-4)

### படை வீரர் மாணவி விபத்தில் காயம்

தென்மராட்சி, மே 1

மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்ற சைக்கிள்—மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவியும் படையினர் ஒருவரும் காயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் ஜெயந்தி (வயது 18) என்பவரே காயமடைந்த மாணவி ஆவார்.

இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். (இ-117)

### மாநில காங்கிரஸ்...
(முதலாம் பக்கத் தொடர்)

பார்க்கப்படுகிறது.

மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசில் இணைந்து கொண்டுள்ளது தெரிந்ததே. (இ-10)

## யாழ்ப்பாண மாநகரசபை
## கூறுவிலை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையின் பாவனைக்காக பின்வரும் வலுவுள்ள புதிய மின்பிறப்பாக்கிகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் **09 - 05 - 97** ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். ஜப்பான் தயாரிப்பு விரும்பத்தக்கது.

1. Diesal Engine Generator max. out put 7K W
2. Diesal Engine Generator max. out put 4K.W

**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1997 - 04 - 30 (சி/653)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
விடுக்கும்
## அன்பான வேண்டுகோள்

அனைத்து தொழிலாளர்களுக்கும் வணிகர் கழகத்தின்
**அன்பான மேதின வாழ்த்துக்கள்!**

1. கொழும்பில் இருந்து பொருள்களைக் கொண்டு வர விரும்பும் எமது கழக அங்கத்தவர்கள் அனைவரும் கொண்டு வர விரும்பும் பொருள்களுக்கான அனுமதியினை வர்த்தக அமைச்சின் ஊடாக பாதுகாப்பு அமைச்சிடம் பெற்றுத் தயார் நிலையில் இருக்குமாறும், பதிவுகளை வர்த்தக அமைச்சில் செய்து கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்றோம். வெகு விரைவில் கப்பலில் இடவசதி செய்து தரப்படும்.

2. யாழ்.குடாநாட்டில் உற்பத்திப் பொருள்களைக் கொழும்புக்கு அனுப்ப விரும்புவோர் 70 லோட் (700 மெ. தொன்) அனுப்ப இடவசதி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டுள்ளது. விரும்புவோர் உடன் கழகப் பணிமனையில் தொடர்புகொள்ளவும்.

3. யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சகல வர்த்தக ஸ்தாபனங்களும் பதிவுச் சான்றிதழ் இருப்பின் அதன் பிரதியை உடன் எமது சங்கப் பணிமனையில் ஒப்படைத்து பதிவினை உறுதிப்படுத்தவும்.

நன்றி.

தி. குஞ்சிதபாதம் - தலைவர்
சி. நமசிவாயம் - செயலாளர்

(46616)


"தொழிலாளர் உரிமைகள் கிடைக்க வாழ்த்துகின்றோம்"

★ **சாரங்கா** ★

வண்ண நகையுகத்து வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க ஏற்றதோர் நகையகம்:

**சாரங்கா நகைமாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அருள்முருகன் நகையகம்,
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(தலைமையகம்)

சிவா நகைமாடம்,
கண்டி வீதி,
சாவகச்சேரி.
(கிளையகம்)

(சி/650)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org